# சர்வதேச ஆயுத விற்பனையாளர் கவலை!

உலக நாடுகளில் இப்போது போர் நிறுத்தம், ஆயுதக் குறைப்பு, சமாதானம் பற்றியெல்லாம் அடிக்கடி பேசப்படுகிறது நாடுகளை ஆளுகின்ற அரசாங்கங்கள் ஆயுதக்கொள்வனவில் நிதியைச் செலவிடத் தயக்கம் காட்டி வருகின்றன

யுத்தத்தில் செலவிடக் கூடிய நிதியை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் நாடுகளை அபிவிருத்தி செய்யவும் முன்னுரிமை கொடுக்கப்பட்டுவருகின்றது.

மனித குலத்தை அழிவின் விளிம்பில் இருந்து காப்பாற்ற வேண்டுமாயின் உலகில் சமாதானம் நிலவவேண்டும். நிலைக்க வேண்டும். சமாதானத்தை எவ்விதம் விரைவில் ஏற்படுத்தக்கூடும் என சர்வதேசமட்டத்தில் பேச்சுவார்த்தைகள், கருத்தரங்குகள், கூட்டங்கள் சந்திப்புகள் இடம்பெற்று வருகின்றன.

அதேசமயம், உலகில ஆயுத விற்பனையை எவ்விதம் அதிகரிக்கலாம், லாபம் ஈட்டலாம் என்பது பற்றியும் சர்வதேச ஆயுத விற்பனையாளர்கள் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றார்கள்.

உலகில் சமாதானம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் இவர்களை வாட்டத்தொடங்கியுள்ளது.

அண்மையில் பாங்கொங்கில் சந்தித்துக் கொண்ட சர்வதேச ஆயுத விற்பனையாளர் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், உலகில் சமாதானம் ஏற்பட்டுவருவது தமக்குக் கவலையை ஏற்படுத்தி வருகின்றது எனவும், தமது வியாபாரம் மிகவும் குன்றிய நிலைக்கு வந்துகொண்டிருப்பதாகவும் விசனப்பட்டுக்கொண்டனர் எனத் தகவல் அறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.



# அறவழி
NONVIOLENCE

அறம் 2 ★ 1989 மாசி ★ மாத இதழ் ★ விலை 3-00
வழி 13 பக்கம் 6


University of Sri Lanka RECEIVED 1990 Periodicals Division Library

▲ ஆசிரிய கலாசாலைகள் ▲ பல்கலைக் கழகங்கள்

# காந்தீய ஆதாரக் கல்வி போதிக்கப்படல் வேண்டும்



## காந்தி நினைவுதினக் கூட்டத்தில் பண்டிதர் சிவலிங்கம உரை

"எமது சமுதாயத்தில் கல்வி வளர்ச்சி அடைய வேண்டுமாயின் எமது பகுதிகளில் இருக்கின்ற ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் பல்கலைக்கழகங்களில் காந்தீய ஆதாரக்கல்வியைப் போதிக்க நடவடிக்கை எடுக்க கல்வித்துறையினர் முன்வாரவேண்டும்"

இவ்வாறு இளைப்பாறிய அதிபரும், சைவப் பெரியாருமாகிய பண்டிதர் செ. சிவலிங்கம் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் கேட்போர் கூட்டத்தில் கலாசாலையின் சமூகவியல் மன்றத்தினால ஒழுங்கு செய்யப்பட்ட காந்திநினைவு தினக் கூட்டத்தில சிறப்புரை வழங்கும் போது தெரிவித்தார்.

சமூகவியல் மன்றத்தலைவர், திரு எஸ். கே. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நினைவுதினக் கூட்டத்தில் பண்டிதர் சிவலிங்கம் மேலும் உரையாற்றுகையில்,

"மனிதகுலத்தின் மீட்புக்காக காந்தி மகான். இன, மத குல, மொழிகளுக்கு அப்பாற்பட்ட வகையில தனது அரும்பெரும் சேவைகளை ஆற்றியுள்ளார் காந்தீஜியின் வாழ்க்கையில் இருந்து நாம் கற்றுக்கொள்ளக் கூடிய பாடங்கள அதிகம் இருக்கின்றன எனவும், "ராட்டினமே எனது ஆயுதம், அதில் தான் இந்தியாவின் எதிர்காலமே தங்கியுள்ளது" என்றார்

கலாசாலை அதிபர் செல்வி எஸ். சின்னப்பு அங்கு ஆசியுரை வழங்குகையில் நாம் சமுதாய முன்னேற்றப்பாதையில் செல்லவேண்டும் அதற்கு நாம் அனைவரும் காந்திஜீயால் உலகிற்கு வழங்கப்பட்ட அறவழிப் பிரகாரம் வாழ்க்கையைக் கொண்டு செல்வது நல்லது அறவழியால் என்று மக்களுக்கு நன்மையே ஒழிய தீமை இல்லை" எனவு கூறினார்

அறவழிப் போராட்டக் குழுவின் அனுசரணையுடன் இந்நினைவுக் கூட்டம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

சமூகவியல் மன்றத்தின் செயலாளர் திருமதி அமுதவல்லி சுவராஜசிங்கம் நன்றியுரை வழங்கினர்.



முரண்பாடுகளை நீக்குவோம்
ஒற்றுமையை வளர்ப்போம்




டென்மார்க் அறவழி இயக்க சிறுவரின் கைவண்ணத்தால் வரையப்பட்ட சித்திரம்

# அறவழியின் பத்தாண்டு சேவை நிறைவு விழா நிகழ்ச்சிகள்

அறவழியில் போராட்டக் குழுவின் பத்தாண்டு சேவை நிறைவை முன்னிட்டு பல்வேறு விதமான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அவையாவன: சாவகச்சேரி தபால் அலுவலக, மக்கள் வங்கி ஊழியர்களுக்குத் தேனீர் விருந்துகள், விதவைகள் மறுவாழ்வுத்திட்ட உதவிகள் வழங்கல், அங்கவீனர் இருவருக்கும் மூன்று சில்லுச்சைக்கிள், சக்கர நாற்காலி வழங்கல், கலாச்சாரப் போட்டிகளில் வெற்றியீட்டிய புலமைப் பரிசில் திட்ட மாணவர்களுக்குப் பரிசு வழங்கல், வன்செயலால் குடும்பத்தலைவர்களை இழந்த 100 பிள்ளைகளுக்கு மதிய உணவு, 100 விதவைகளுக்கு மதிய உணவு வழங்கல், பொதுக் கூட்டம், கலாச்சார நிகழ்ச்சிகள் என்பனவாகும்.

இம்மாதம் 25 ம் திகதி நடைபெறும் இந்நிகழ்ச்சிகளின் போது பல பிரமுகர்களும், அறவழி ஆதரவாளர்கள், தொண்டர்களும் பங்குபற்றவுள்ளனர்.

● இலங்கையில் வெளியிடப்படும் ஒரேயொரு அறவழி இதழ் ●

**அறமுரசு**

உறுதியான அனுபவத்துடன் கூடிய கடவுள் நம்பிக்கை இருந்தால் தான் எண்ணத்தில் தூய்மை ஏற்படும் —காந்தி.

# அறநோக்கில்

## பண்படுத்துவோம்

நிலத்தை நன்கு துப்பரவுசெய்து உழுது பண்படுத்தி, உரமிட்டு, ஒழுங்காக நீர் பாய்ச்சினால்தான் அங்கே நாட்டப்படுகின்ற பயிர்களில் இருந்து நல்ல விளைச்சலைப் பெறலாம்.

பண்படுத்தப்படாத நிலத்தில் நல்ல விளைச்சலையோ அன்றி பலாபலனையோ எதிர்பார்க்க முடியாது.

இது எல்லோருமே பட்டறிவுமூலம் அறிந்து கொண்டிருப்பது தான்.

நாடு முன்னேற வேண்டும். நாட்டில் வாழ்கின்ற மக்கள் முன்னேற்றம், அபிவிருத்தி, வளர்ச்சியடைய வேண்டும்.

நாட்டு முன்னேற்றம் - மக்கள் முன்னேற்றம் இவை இரண்டுமே ரயில் பாதையில் இருக்கின்ற தண்டவாளம் போன்றது. இரண்டும் ஒரே திசையில் வளர்ச்சியடைய வேண்டும்.

நாடு மட்டும் அபிவிருத்தி அடைந்து விட்டால் அந்நாடு செழிப்புள்ளதாகவோ அல்லது பசுமையுள்ளதாகவோ இருக்க இயலாது.

நாட்டில் வாழ்கின்ற மக்கள் மத்தியில் நல்ல வளர்ச்சி, நல்ல மனோபாவம், நல்ல சிந்தனைகள், நல்ல பண்பாடுகள் வளரல் வேண்டும். இல்லையேல் வளர்க்கப்படல் வேண்டும்.

தமிழர் பிரதேசங்களில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல்கள், அரச பயங்கரவாதம், கொலைகள், அழிவுகள், இழப்புகள் காரணமாக மக்கள் மத்தியில் வெறுப்பு விரக்தி தோன்றிவிட்டன. அதன் காரணமாக மக்களின் இதயங்கள் வாடி, வதங்கி, வரட்சித் தன்மைக்கு உள்ளாகி விட்டன.

கட்டாந்தரை போலாகிவிட்ட மக்களின் மனங்களில் மாற்றம் செய்யப்படவேண்டிய தேவை அவசியமாகிவிட்டது

நாட்டு முன்னேற்றத்துக்கு எவ்விதம் நிலம் பண்படுத்தப்படல் மிக அவசியமானதோ—அதே போன்றுதான் சமுதாய முன்னேற்றத்திற்கும் அங்கு வாழுகின்ற மக்களின் மனங்களும் பண்படுத்தப்படல் வேண்டும்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது பெரும்பான்மையான மக்கள் மத்தியில் நல்ல எண்ணம், நல்ல சிந்தனை, நம்பிக்கை, விசுவாசம், வாழ்க்கையில் பிடிப்பு, இலட்சிய தாகம், போன்றவை இல்லாமல் இருக்கின்றனவே.

நம்பிக்கையும் இலட்சியமும் இல்லாத சமுதாயம் நீடித்து வாழாது.

தமிழ் சமுதாயத்தின் வரலாறு, பாரம்பரியம் பண்பாடு, ஒழுங்கு பற்றியெல்லாம் தோல்விபோகாது பேசுவதில் முன்னணியில் காணப்படுகின்றோம்.

ஆனால், சமுதாயத்தின் வளர்ச்சிப்போக்கு இன்னமும் பின்னடைந்த நிலையில் தான் உள்ளதே! இந்த நிலை ஏன்?

எனவே, தமிழ் சமுதாயத்தினைப் பிடித்துள்ள அபாயமிக்க நோய்களின் தன்மைகளை அறிந்து, அவற்றுக்கு நல்ல மருந்துகளைக் கொடுத்து, மக்கள் மனங்களைப் பண்படுத்தி நல்ல விளைநிலங்களாக்க வேண்டியது இன்றைய காலகட்டத்தில் தாமதமின்றிச் செய்யப்பட வேண்டிய மிக முக்கியமான பணியாகும்.

இவற்றையெல்லாம் புறக்கணித்து விட்டு மனித உடலினை அழகுபடுத்தி பார்ப்பதால் மட்டும் மனிதன் மனிதனாக சமுதாயத்தில் அமைதியுடன் வாழ்ந்துவிட முடியுமா?

எனவே இதயங்களைத் திட்டமிட்டுப் பண்படுத்தும் பணிகளை சமுதாய நலன்பேணுவோர், கால தாமதமின்றி ஒவ்வொரு கிராமத்திலும் ஆரம்பிக்க வேண்டும்.

தமிழ் சமுதாயம் வாழவேண்டும், வளர்ச்சிபெற வேண்டும்; நாடு முன்னேற வேண்டும் என்பதில் அக்கறை ஆர்வம், ஆதங்கம் உள்ளவர்கள் இதனை ஒரு சவால் முயற்சியாக எடுத்துப்பணிசெய்ய முன்வரல் வேண்டும்.

சமுதாயத்தைச் சீர்திருத்தி, சரியான பாதையில் இட்டுச் செல்ல இன்னமும் கால அவகாசம் இருக்கின்றது.

இதயங்களைப் பண்படுத்தும் ஆக்கப்பணிதான் எம் தேவைகளில் முதன்மையானதாக இருத்தல் வேண்டும்.

இதனை இன்றே செய்வோம். நன்றே செய்வோம்!

# சமுதாய மாற்றத்தை அறவழி மேலும் ஏற்படுத்த வேண்டும்

சாதியின் பேரால், தீண்டாமையின் கொடுமையினால் கொடூரமாக எங்களில் பலரும் தாக்கப்பட்டு உடல், உளரீதியாக சொல்லொணாத் துன்பங்களை சுமந்து கொண்டிருந்த காலம். பிள்ளையாரின் தேர் வடத்திலே எம்மவர்களில் சிலர் பிடித்துவிட்டார்களே என்ற காரணத்திற்காக தேர் உலாவரவிருந்த பிள்ளையாரையே தேரிலே இருந்து இறக்கி உள்ளே கொண்டு சென்று பூட்டிய நேரம் சாதிப் பிரிவினைக்கெதிராக போராடினார்கள் என்ற காரணத்திற்காக அரச இயந்திரத்தையே தமது கைக்குள் போட்டுக் கொண்டு எம்மவரை பொலிஸாரினால் சித்திரவதைக்குட்படுத்தியகாலம். இழப்பதற்கு உயிர் ஒன்றைத்தவிர சொத்துக்கள் ஏதுமற்ற எம்மவர்கள் கூலியை கூட்டிக் கேட்டதற்காக தங்கள் தோட்டங்களில் வேலை செய்ய வேண்டாமென்று தடை போட்டு எம்மவர்களின் அடுப்படிகளிலே பல நாட்கள் பூனைகளை உறங்க வைத்த அந்தக் காலத்தை எண்ணிப் பார்க்கிறேன் ...இது மட்டுமா இல்லையில்லை குழந்தை பிறந்தவுடன் தனது குழந்தைக்குப் பெயர் வைப்பதற்கு கூட உரிமையில்லாதவர்களாக எம்மவர்கள் இருந்திருக்கிறார்கள். அதனால் தான் அவர்களுடைய பெயர்களிலெல்லாம் இன்றும் 'ன்'னென்று இறுதியில் வருகின்றது ஆம் கட்டையன், சுப்பன், பொன்னன், கறுப்பன், வெள்ளையன், கொத்தன் இந்தப் பெயர் பட்டியலை ஒரு தடவை திருப்பி பார்த்தால் எல்லாம் சாதிரீதியாக, தீண்டாமையின் பேரால் ஒதுக்கி வைக்கப் பட்டவர்களின் பெயர் பட்டியலாகத்தான் இருக்கிறது இவையெல்லாம் மனித உரிமைகளை மீறும் செயல் என்பது எம்மில் பலருக்கு அன்று தெரியாது. ஆனால் இன்று எங்களுக்கு சின்னப் பிரச்சினை வந்துவிட்டால் போதும். மனித உரிமை மீறப்படுகிறது என்று தம்பட்டம் அடிக்கிறோம்.

மேற்பார்த்த சம்பவங்கள் இந்த மண்ணில் இனிமேலும் நிகழக்கூடாது என்பதற்காகவும் எங்கள் கிராமங்களில் அன்பு சமாதானம் அமைதி நிலவவும் பாடுபடும் நோக்குடன் 1979-ம் ஆண்டு சிறிய குழுவாக ஆரம்பிக்கப்பட்ட அறவழிப் போராட்டக்குழு இன்று சர்வதேச ரீதியாக வளர்ச்சியடைந்து பல நாடுகளில் தனது கிளைகளை அமைத்து செயற்பட்டு வருகிறது. சர்வதேச போர் எதிர்ப்பாளர் இயக்கம், உலக சமாதான சேவை இயக்கம் உட்பட உலக அமைதிக்காகப் பாடுபடும் பல அமைப்புகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு அரும்பணியாற்றி வருகிறது.

துப்பாக்கி குண்டுகளாலும், ஷெல், பொம்மர் தாக்குதலாலும், இனக்கலவரத்தாலும் கடந்த ஆண்டுகளில் எமது வருங்காலச் செல்வங்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுடைய எதிர்கால வாழ்வு சூனியம் நிறைந்ததாக இருக்கக்கூடாது என்பதற்காக குடாநாட்டின் பலபகுதிகளிலுமுள்ள சிறுவர்களை ஒன்றிணைத்து அறவழிச் சிறுவர் கழகங்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளன. இந்தக்கழகங்களிலுள்ள சிறுவர்களுக்கு கல்வியூட்டல் மூலமும், விளையாட்டுக்கள் மூலமும் நல்ல சிந்தனையை ஏற்படுத்தி அவர்களுடைய எதிர்கால வாழ்வுக்கு உரமிடும் வகையிலும் இந்த குழு இன்று மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. அத்துடன் சிறுவர் கழகங்களுடன், அறவழிப்பாலர் பாடசாலைகளையும் இணைத்து தமது ஸ்தாபனத்தின் சார்பில் சமூக அபிவிருத்தி இணைப்பாளர்களையும் நியமித்து கிராமங்களில் பணியாற்றி வருகிறது.

மேற்குறிப்பிட்ட சிறுவர்களை மேலும் உற்சாகப்படுத்தும் வகையில் "தமிழ் சிறுவர் தினம்" ஒவ்வொரு வருடமும் இறுதியிலும் கொண்டாடப்பட்டு வருகிறது

விதைவகளுக்கான மறுவாழ்வுத் திட்டம், அங்கவீனர்களுக்கு, உதவி குடும்பத்தலைவர்களை இழந்த குடும்பங்களிலுள்ள குழந்தைகளுக்கு பாடசாலை உபகரணங்களுக்கான உதவி என பலவேறு பணிகளை ஆற்றிவரும் அறவழிப் போராட்டக்குழுவுடன் நாம் ஒவ்வொருவரும் இணைந்து எமது கிராமங்களை அறவழிக் கிராமங்களாக மாற்றுவோமேயானால் எங்கள் வாழ்வு தொல்லைகளற்ற எல்லையைத் தாண்டும்.

### அடிமட்டத்தை அணுக வேண்டும்

வசதியற்ற, பலவீனமான, நலிந்த மக்களுக்கு உதவுவதுடன் சமாதானசகவாழ்வு மக்களுக்கு ஏற்படுத்தவும் பாடுபட்டுவரும் அறவழிப் போராட்டக்குழு இன்னும் அடிமட்டத்திலுள்ள கிராம மக்களை அணுகவேண்டும். அதாவது அரசியல்வாதிகள் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக குடியேற்றத்திட்டங்கள், வீடமைப்புத்திட்டங்கள் சேரிக்குடியிருப்புகள் என்ற பெயரில் எம்மவர் பலரை தனிமைப்படுத்தி வைத்துள்ளார்கள். அதாவது மேற்குறிப்பிட்ட பகுதிகளில் குடியிருப்பவர்கள் யாரென்பதனை ஒரு புள்ளிவிபர ரீதியாக ஆய்வு செய்து பார்த்தால் அது சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் என்பது தெரியவரும் எனவே குடியேற்றத்திட்டம், கொலனிக்காணி, வீடமைப்புத்திட்டம் என்ற பெயரிலுள்ள பகுதிகளுக்கு நல்ல பெயர்களைச் சூட்டி ஏனைய கிராமங்களைப் போல அவை இருப்பதற்கு அறவழிப் போராட்டக்குழு கவனமெடுக்கவேண்டும். அத்துடன் அரசாங்க அதிகாரிகள் பலர் தங்கள் வீட்டு ஒழுங்கைகளுக்கும், மயானத்திற்கும் தார்போடுவதிலும், மின்சார வசதி ஏற்படுத்துவதிலுமே கண்ணுயிருக்கின்றனர். இந்த நிலையை மாற்றி மக்கள் வாழ்விடங்களுக்குச் செல்வதற்கு வீதிகள், மின்சாரம் அமைத்துக்கொடுக்கவும் இந்தக்குழு பாடுபடவேண்டும்.

**என். கே. துரைசிங்கம்**

யாழ். குடாநாட்டில் மின்சாரமில்லாத, ஒழுங்கைகள் நிறைந்த ஒரு கிராமத்திற்கு நாங்கள் செல்லுகிறோமென்றால் அது சாதி ரீதியாக ஒதுக்கப்பட்ட மக்கள் வாழும்பகுதி என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஆலயப்பிரவேசம் கலப்புத் திருமணம் செய்தால் மட்டும் போதாது சாதி ஒழிக என்று சுலோகம் போட்டால் போதாது. கிராமங்களின் அத்தியா சேவைகளை எல்லாமக்களும் பெறுவதுபோல் மேற்குறித்த மக்களும் பெறுவதற்கு வழிவகை செய்யவேண்டும்.

இதன் மூலம் தான் ஒரு சமுதாயமாற்றத்தை ஏற்படுத்த முடியும் சமுதாயமாற்றத்தின் மூல சாதி, மத பேதமற்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்கமுடியும்.

"நாட்டிற்கு தொண்டு செய்ய விரும்புகிறாயா? அப்படியானால் கிராமத்தை நாடிச் செல்" என்பது காந்தியடிகள் கூற்று. எனவே காந்தியின் கூற்றுக்கு இசைவாக பணியாற்றும் அறவழி இயக்கம் மேற்கூறியவற்றினை கவனத்தில் எடுத்து இனிவரும் காலங்களில் செயல்பட வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

தன்னைப்போல பிறரைப்
பேணும்
தனிப்பெரும் பண்புதழைக்க
வேணும்
அன்பு கருணை அஹிம்சை
என்றும் இன்புறுவாழ்வின்
கொள்வோம்".

# ஆசிச் செய்திகள்

## நற்சமூக நடுநிலைய இயக்குநரின் ஆசி

நோக்குகளில் எம்மோடு ஒத்த ஓர் அமைப்பான ''அறவழிப் போராட்டக்குழு'' தமது செயற்பாடுகளின் பத்தாவது ஆண்டு நிறைவைக் களிப்பதைக் கண்டு, அதில் ஓர் ஆசிச் செய்தி மூலம் சம்பந்தப்படுவதில் பேருவகை கொள்கிறோம். வயதில் ஒரு வருடமேனும் பூர்த்தியாகாத ஓர் அமைப்பைச் சேர்ந்த எமக்கு இந்த நிகழ்ச்சி பெரும் நம்பிக்கையையும், உற்சாகத்தையும் அளிக்கிறது. உலகை அச்சுறுத்தும் அணு ஆயுதங்கள், விண்வெளியிருந்து ஏவப்படக்கூடிய கணைகள் போன்ற புற பேரழிவுச் சாதனங்களால் எமது சமுதாயம் அச்சுறுத்தப்படவில்லை. மாறாக, இவற்றிலும் கொடூரமான விளைவுகளை உடையதும், எமது உள்ளத்திலிருந்தே ஊற்றெடுப்பதுமான தீய எண்ணங்கள், திட்டங்கள், வன்முறைப் பலாத்காரங்கள் இவைகளே எம்மை இன்று அல்லற்படுத்துகின்றன.

நம்பிக்கை முழுவதுமே இழந்து, அழிவின் உச்சக் கட்டத்திலிருந்த வேளையில் உலக வல்லரசுகள் உட்பட பல அரசுகள் தீர்வுகாண முனைந்தும் முடியாமல் இருந்தது. காரணம்: உண்மையான எதிரி மனித உள்ளங்களிலேயே மறைந்து பதுங்கியிருந்தது.

உலகின் பழம்பெரும் சமயங்களிலும் பண்பாட்டிலும் ஆழ்ந்த பற்றுள்ளவர்கள் நாம். ஆனால் அண்மைக்காலச் சம்பவங்கள் எம்மைப்பற்றியும் எமது நேர்மை பற்றியும் கேள்விக்குறி எழுப்புகின்றன. உண்மை, நீதி, சமத்துவம், உயிருக்காக ஆரம்பிக்கப்பட்ட பிரச்சாரமும் போராட்டமும் நாளடைவில் ஆட்சிப்போராக, கொலைகளாக, துவக்குமுனைத் தலைமைத்துவமாக மாறி எமது கலை கலாச்சாரம், கல்வி சகலதும் அழியக்கூடிய சீர்கெட்ட நிலையிலுள்ளோம்.

இந்நிலை சகல நல்மனத்தோரின் அவசர செயற்பாட்டுக்கு அவலக்குரல் எழுப்புகிறது. எமது சமுதாயத்தில் நீதியையும், சமாதானத்தையும் கொண்டுவர வன்செயலையே வழியாகக் கொள்ளும் தீவிர சுயநல, அரசியல் அமைப்புக்களின் பொறுப்பிலே விட்டுவிட முடியாது. அதே சமயம் தம் பொறுப்புக்களிலிருந்து ஒதுங்கி இறைவழிபாடு, பிரார்த்தனை என்ற போர்வைக்குள் ஒளிக்கும் மதத் தலைவர்களின் கைகளிலேயும் விட்டுவிட முடியாது.

நுண்ணிய மனச்சான்றுடன் உள்ளத்தில் சமூகநீதி, சமாதான தாகம்கொண்ட எல்லாப் பிரசைகளும், நேர்மை நிறை அரசியல்வாதிகளும், உண்மைநிறை மதத்தலைவர்களும் எமது சமூகத்தின் முன்னணிக்கு வரவேண்டும். மதங்களாலும் கலாச்சாரத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகளைக் கையாண்டு எம் சூழலில் இருந்து அறியாமை, எரிச்சல், போட்டி மனப்பான்மை, வெறுப்பு முதலிய எதிரிகளைக் களைந்து நீதியான சமாதானத்தை நிலைநாட்ட உழைக்க முன்வரவேண்டும். அன்றேல் எமது சமூகத்தின் அழிவு தொடரும்

இதற்காகத்தான் அறவழிப் போராட்டக்குழு, நற்சமூக நடுநிலையம் போன்று இயங்கும் எல்லாச் சமூக முன்னேற்ற அமைப்புக்களின் பங்களிப்பும் கூட்டு முயற்சியும் இன்றியமையாததும் மிகுந்த பலனளிப்பதுமாகும்.

இப்படியான அமைப்புக்கள் பரவலாக உதயமாவதும் செயற்பாட்டில் வளர்வதும் அவற்றிடையே ஒத்துழைப்பும் பரஸ்பர உறவும்வளர்வதுமே எமது அவா.

அடுத்த பத்து ஆண்டுகளில் மிகுந்த கனிகொடுக்கும் பெரும் வளர்ச்சிகாண உங்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.

வாழ்க
அறவழிப் போராட்டம்

எஸ். ஜே. இம்மானுவல்
இயக்குநர்.

நற்சமூக நடுநிலையம்,
115, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

## அறவழிப் போராட்டக் குழுவின் அளப்பரிய பணி

ஈழத் தமிழரின் மத்தியில் இன்று அவசியம் தேவைப்படுவது சமாதானமும், ஒற்றுமையும். ஏற்றத்தாழ்வற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கி சுபீட்சவாழ்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த, அறவழிநின்று பணியாற்ற அறவழிப் போராட்டக்குழு போன்ற அமைப்புக்கள் தேவை.

கடந்த பத்து ஆண்டுகளாக பல்வேறு துறைகளில் சிறந்த சேவையாற்றிவரும் அறவழிப் போராட்டக்குழு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நற்பெயர் பெற்றிருப்பதோடு, சர்வதேச அமைப்புக்களின் உதவியையும் பெற்றுவருகின்றது. பின்தங்கிய மக்களுக்குக் கல்வியூட்டுவதற்கு எடுத்துவரும் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கன. யூலை 83 இனக் கலவரத்தினுல் பாதிக்கப்பட்டு, அகதிகளாக வந்தவர்களுக்கு கைதடியில் அகதிகள் முகாம் அமைத்து ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கன. பல மாதங்களாக இவ்வகதிகளுக்கு உணவு, உடை மற்றும் புனர்வாழ்வு வசதிகள் அளித்து பராமரித்து வந்ததை எவரும் மறக்க முடியாது.

தென்னிலங்கையில் வீடு வாசல்களை இழந்து வந்த மலையக மக்களுக்கு தமிழ் பகுதிகளில் வீடுஅமைத்து வாழ்விடம் தேடிக்கொடுத்த பெருமையும் இக்குழுவிற்கு உண்டு. சமாதானத்தையும், சமத்துவத்தையும் இந்நாட்டில் ஏற்படுத்துவதற்குக் காந்திய நெறிகளைக் கடைப்பிடித்து வரும்வழி பாராட்டத்தக்கது. அகிம்சை வழிகளில் பல பிரச்சனைகளைத் தீர்க்கலாம் என்பதை நடைமுறையில் பரீட்சித்துவரும் இக்குழு அறநெறிக் கொள்கைகளைப் பரப்புவதற்கு வெளியிட்டுவரும் பிரசுரங்கள், விளம்பரங்கள் பயனுள்ளவையாக அமைந்துள்ளன.

இளம் சந்ததியினரின் இதயங்களில் அறவழிக் கருத்துக்களைப் புகுத்துவதற்கு ஆரம்ப பாடசாலைகள் பலவற்றைப் பின்தங்கிய கிராமங்களில் நடாத்திவருவது வரவேற்கத் தக்க ஒன்றாகும்.

அல்லற்பட்டு துயரநிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஈழத் தமிழர்களின் நல்வாழ்வுக்கும், மறுவாழ்வுக்கும் அறவழிப் போராட்டக்குழு தொடர்ந்து சிறப்புடன் பணியாற்றி பத்து ஆண்டு நிறைவினை அடைவதையொட்டி வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்,
ஐ. தி. சம்பந்தன்
செயலர்
உலக சமாதான மாமன்றம்
இலங்கைக் கிளை.

4, குமாரசாமி வீதி
யாழ்ப்பாணம்.

## வதிரி அபிவிருத்தி நிறுவனத்தின் ஆசிச்செய்தி

அறவழிப் போராட்டக் குழுவின் செயற்பாடுகளை ஆரம்பத்திலிருந்தே மிகவும் உன்னிப்பாக நான் கவனித்து வந்துள்ளேன். இன்று எங்கள் நாட்டு நிலைமையில் இப்படியான ஓர் இயக்கம் நம்மிடையே இயங்குவது சாலப்பொருத்தமாகும், சூரியனே அஸ்தமிப்பதில்லை அங்கு என்று சொன்ன பிரிட்டிஷ் சாம்பிராச்சியத்தை அறவழியைப் பின்பற்றி, சுக்குநூறாக்கிய பெருமை மகாத்மாகாந்தி அடிகளுக்கு உண்டு. ஆனுல் இன்று இந்திய மக்கள் தமது தேசத் தந்தையின் கொள்கைகளை அடியோடு மறந்து செயலாற்றுவது பரிதாபகரமானது.

எந்தக் கொள்கையும் வெற்றி பெற வேண்டுமானுல் அதனை முன்னெடுத்துச் செல்பவர்களின் செயலாற்றலில் அது தங்கியுள்ளது. அந்தவகையில் பார்க்கப்போனுல் தங்கள் இயக்கத்தில் சேவைக்காகத் தம்மை அர்ப்பணித்த பலர் உண்டு.

இன்று யாழ். மாவட்டக் கிராமங்களிலே உள்ள எல்லா மக்களையும்விட, நலிந்த குடிசை வாழ் தாழ்த்தப்பட்ட மக்களே இராணுவ நடவடிக்கை காரணமாக மிகவும் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். விரிவான புள்ளிவிபரம் ஒன்று திரட்டப்படுமானுல், உயிர் இழந்தோர், ஊனமுற்றோர், வீடுகள் எரிக்கப்பட்டோர், வேலையிழந்தோர், தாம் செய்யாத பாவத்திற்காக நையப்புடைக்கப்பட்டு கொடுமைப் படுத்தப்பட்டோர் இந்தத் துர்அதிர்ஷ்டமான மக்களிடையேதான் மலிந்திருப்பர். எங்கள் அபிவிருத்தி நிறுவனம் சென்ற சிலகாலமாகப் பாதிக்கப்பட்ட மக்களிடையே செய்த மாதிரி ஆய்வுகளின் மூலம் இது தெட்டத்தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

அவர்களுடைய புனர்வாழ்வுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, அவர்களுக்கு அத்தியாவசிய தேவையான வீடு, உணவு, உடை முதலியன கிடைக்கக் கூடியதான நடவடிக்கைகளில் தங்கள் அறவழிப் போராட்டக்குழு இன்னும் தீவிரமாக ஈடுபடக் கோருகிறேன். அத்துடன் வாழ்வில் ருசிக்கப் பலஉள்ளன என்பதனை அவர்களுக்கு நாம் உணர்த்தக் கோருகின்றன். இது அவ்வளவு சுலபமானதல்ல. அதற்காகவேண்டி நாம் அல்லும்பகலும் பாடுபடவேண்டும். உலகத்திலே 'மனித நேயத்தை' விடச் சிறந்ததொன்று இருக்கமுடியாது. இது இல்லாததினுற்றான் இன்று உலகம் அழிவின் விளிம்பிலுள்ளது.

அறவழிப் போராட்டக்குழுவின் பத்தாமாண்டு நிறைவேறும் இந்நேரத்தில் கீழே குறிப்பிட்ட அடிகளை ஒற்றித் தங்கள்பணி தொடரட்டும்.

''ஏழை மக்களிடம்
செல்லுங்கள்.
அவர்களோடு வாழுங்கள்.
அன்பு செலுத்துங்கள்.
அவர்களுக்கு என்ன
தெரியுமோ
அதிலிருந்து உங்கள்
பணிகளைத் துவங்குங்கள்.
அவர்களிடம் என்ன
இருக்கிறதோ
அதைக்கொண்டு
தொடங்குங்கள்.
பணி முடிந்ததும் —
இலக்கை அடைந்ததும்
'அட இதை நாமல்லவோ
சாதித்தோம்!' என்ற
பெருமிதத்தில்
அவர்கள் பூரிக்கவேண்டும்.
அப்படிப் பூரிக்கச்
செய்பவனே
உன்னதமான தலைவன்.''

'அறவழி'ப் பத்திரிகை நீடூழி காலம் நிலைத்து நின்று மக்களுக்குச் சேவையாற்ற இறைவனை இறைஞ்சுகின்றேன்.

வெல்க தங்கள் பணி!

மூ. சி. சீனித்தம்பி
தலைவர்.
வதிரி அபிவிருத்தி நிறுவனம்.

## மில்க்வைற் அதிபர் வாழ்த்துகிறார்

''ஆருயிர்க் கெல்லாம் அன்
புடன் தொண்டு புரியும்
ஆர்வத்தை அண்ணலே,
எனக்கு நீ நல்குவாயாக''

சேவை செய்பவன் மன்னுயிரையும் தன்னுயிர்போல் கருதுகிறான். அங்ஙனம் ஒற்றுமையும், ஐக்கியமும் நிலைநாட்டப்படுகிறது, நல்லறிவு ஓங்குகிறது. தொண்டென்னும் பெருவாய்ப்பு எல்லார்க்கும் சொந்தமானது. அதைப் பயன்படுத்தாதவன் வாழ்ந்தும் வாழாதவனுகிறான்.

பத்தாண்டு காலத்தில் தாங்கள் புரிந்துவந்த தொண்டுகளை நேரிற் பார்த்தும், பத்திரிகைவாயிலாக அறிந்தும் பெருமகிழ்ச்சி அடைந்தோம்.

மேலும், தாங்கள் அகதிகளுக்குச் செய்த தொண்டுகள் எல்லாம் பார்த்தோம். ஒப்பற்றது. இப்படியானதொண்டு பல பாகங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டாலோஎன்று நாம் இடை இடையே நினைப்பதுண்டு.

தங்கள் பணிகள் மென்மேலும் வளர்ச்சிபெற்று மேலோங்க இறைவனைப் பிரார்த்திக்கிறோம். வணக்கம்.

கனகராசா
அதிபர்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

## சைவச் சிறுவர் இல்லம்

அறவழிப் போராட்டக் குழுவின் பத்தாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள ''அறவழி'' பத்திரிகைக்கு இந்த ஆசிச்செய்தியை அனுப்புவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். இதன்பொருட்டு அயராது உழைத்த அனைவரினதும் சீரியபணி மெச்சத்தக்கது.

நம் நாட்டில் நிலவிவரும் மூடக் கொள்கைகளையும், பழக்கவழக்கங்களையும் அறவே நீக்குவதற்கு முழுமையான முறையில் பாடுபட்டுவரும் இந்த ஸ்தாபனம் பழமையில் புதுமையும், புதுமையில் புதுமையும் காணத்துடிப்பதே இதன் மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் கால்கோள்களாக அமைந்துள்ளன.

தனி மனித சுதந்திரம் ஒருவனுக்கு எவ்வளவு முக்கியமோ அதே போன்று அறவழியும் தனி மனிதனுல் சுயாதீனமாகவே கட்டியெழுப்பப்படவேண்டும். எனவே அறவழியில் செல்லும் மக்களுக்குச் சுதந்திரம் அளித்து ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான வழிவகைகளை ஆராய்ந்து மேலும்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்ற முதலாவது பெண்மணி

சமாதானப்பணியில் ஈடுபட்டு மனிதகுலத்துக்கு நல்ல பல சேவைகளை ஆற்றியமைக்காக ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த பேர்தா வொன்சுட்னர் (Bertha von Suttner) எனும் பெண்மணிக்கு 1905-ம் ஆண்டில் நோபல் சமாதானப்பரிசு வழங்கப்பட்டது.

நோபல் சமாதானப் பரிசினைப் பெற்றுக்கொண்ட முதலாவது பெண்மணி இவரேயாவார்.

இப்பெண்மணியின் அரியசேவைக்கு மகுடம் சூட்டுவது போல ஆஸ்திரிய நாடு தன் 50,000 சிலஸ் பெறுமதியுள்ள பணநோட்டில் இவரின் படத்தினை வெளியிட்டுள்ளது. அத்துடன், அந்நாட்டின் சில வீதிகளுக்கு இவரின் பெயர் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது. கூடவே, ஆஸ்திரிய நாட்டுத்தபால் முத்திரையிலும் இப்பெண்மணியின் படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பேர்தா வொன் சுட்னரின் சமாதானப்பணியினை உலகிற்கு ஞாபகமூட்டும் வகையில் சுவீடன் தேசமும், இவரின் ஞாபகார்த்தமாக தபால் முத்திரை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

பேர்தா 1843-ம் ஆண்டு ஜூன்மாதம் 9-ம் திகதி ஆஸ்திரியாவிலிருக்கும் மிகவும் பின்தங்கிய கிராமத்தில் வறிய குடும்பத்தில் பிறந்தார். பேர்தா பிறந்த சில வருடங்களின் பின் இவரின் தந்தையார் மரணமாகிவிட்டார். விதவையாகிவிட்ட இவரின் தாயாரே கஷ்டப்பட்டு குடும்பவாழ்க்கையை முன்னடத்திச்சென்றார்.

பேர்தாவின் குடும்பத்தை வறுமை வாட்டியது நிரந்தர வருமானம் எதுவும் இல்லை. அரசினால் வழங்கப்பட்ட சிறுதொகை சமூக உதவிப் பணத்துடனே வாழ்க்கை ஓடியது.

பேர்தாவுக்கு முப்பது வயதாகியது. இவளைத் திருமணம் செய்யச் சிலர் முன்வந்தனர். ஆனால், பேர்த்தாவுக்கோ அவர்களில் எவரையுமே பிடிக்கவில்லை.

வறுமையின் கோரத்தாண்டவம் குடும்பத்தை பலவழிகளிலும் உலுப்பியது. என்ன செய்வதென்றே தெரியாத நிலையில் குடும்பவாழ்க்கை தள்ளாடியது.

வறுமையின் கோரப்பிடியில் இருந்து குடும்பத்தைக் காப்பாற்றவேண்டி, பேர்தா தனது 30 வயதினில் குழந்தைகளைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டாள். சிறு வருமானம் வரத் தொடங்கியது.

இக்காலகட்டத்தில் பேர்தாவின் மீது ஆர்தர் என்பவர் காதல் கொண்டார். ஆனால் பேர்தாவோ ஆர்தரைவிட ஏழு வயது மூத்தவளாக இருந்ததாலும், இருபக்கத்தாரிடமும் நிதி பற்றாக்குறை காரணமாக இவர்களின் பெற்றோர் இக்காதலுக்குப் பச்சைக்கொடி காட்ட முன்வரவில்லை. பெற்றோரின் ஆதரவும், அங்கீகாரமும் கிடைக்காமையினால் இவர்கள் இருவரின் காதலும் முறிந்தது.

அடுத்து என்ன செய்யலாம் லாம் என 1873-ம் ஆண்டளவில் பேர்தா மிகத்தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்த சமயத்தில் தான் உள்நாட்டுப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த ஒரு விளம்பரம் பேர்தாவின் கண்களில் பட்டது.

"பாரிசில் இருக்கும் மிகவும் செல்வந்தரும், படித்தவருமான ஒருவருக்கு பலமொழிகள் தெரிந்த, பண்பான, படித்த செயலாளர் ஒருவர் அவசியம் தேவைப்படுகிறது."

இவ்விளம்பரத்தைக் கண்டதும் உடனடியாகவே தனது விண்ணப்பத்தை அச் செல்வந்தருக்கு அனுப்பி வைத்தாள். அவளது விண்ணப்பத்துக்கு உடனடியாகவே நல்ல பதில் கிடைத்தது. அவளுக்குக் கிடைத்த பதில் கடிதத்தில் அல்பிரட் நோபல் என ஒப்பமிடப் பட்டிருந்தது. இப்பெயர் அவளுக்கு புதியதோர் பெயராகத் தெரிந்தது.

அல்பிரட் நோபலின் தொடர்பு ஏற்பட்டது. அவரின் செயலாளராக பேர்தா நியமனம் பெற்றாள். செயலாளர் பதவி தொடர்ந்தது.

இக்காலகட்டத்தில் பேர்தாவை முன்பு காதலித்த ஆர்தர் பேர்தாவுடன் மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்தி, தத்தமது பெற்றோர்களின் விருப்பத்தினை மீறித் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர். திருமணம் நிறைவேறியதும், பேர்தா தனது செயலாளர் பதவியை விட்டு விலகினார்.

தம்பதிகள் இருவரும் தமது இருப்பிடத்தைவிட்டு வேறு ஒரு நகரத்திற்குக் குடியேறிய சமயத்தில்தான் ரஷ்யா, துருக்கிப் போர் மூண்டது.

இப்போரானது மனித சமுதாயத்தின அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கின்றது என பேர்தா கண்டித்து, பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு கட்டுரைகள் எழுத ஆரம்பித்தார். இவரின் கருத்துக்களுக்கு, மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்தது. இச்சமயத்தில் பேர்தா வொன் சுட்னரும் அல்பிரட் நோபலும் ஒழுங்கான கடிதத்தொடர்புகளை மேற்கொண்டுவந்தனர்.

சமாதானத்தினை வலியுறுத்தி பேர்தா வொன் சுட்னர் ஆறு நூல்களைப் பிரசுரித்ததுடன் பல கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டார். பின்னர் இவர் தனது கணவனுடன் மீண்டும் ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவுக்குத் திரும்பினர்.

வியன்னாவில் இவர்களுக்கு மகத்தான வரவேற்பு நண்பர்களால் அளிக்கப்பட்டது. பின்னர். இவர்கள் பாரிசிற்குச் சென்று அல்பிரட் நோபலைச் சந்தித்தனர். பாரிசில் இருந்த சமயத்தில் லண்டனை தலைமையகமாகக்கொண்டு செயல்பட்ட ஒரு சமாதான இயக்கத்தின் செயல்பாடுகள், குறிக்கோள் பற்றி அறிந்துகொண்டார்.

அந்த இயக்கத்தில் மிக்க ஆர்வம் கொண்டதன் காரணமாக, அவ்இயக்கம் பேர்தா வொன் சுட்னரைத் தமது முக்கிய பேச்சாளராக அமர்த்திக் கொண்டது.

அல்பிரட் நோபல் இவரின் சேவையைப் போற்றி ஊக்கப்படுத்தி மதிப்பூதியம் வழங்கி வந்தார். இக்கட்டத்தில் பேர்தா, அல்பிரட் நோபலை ஊக்கப் படுத்தி, சமாதானத்துக்காக தான் ஆற்றிவருகின்ற பணிக்கு ஆதரவளிக்கும் பொருட்டு சமாதானப் பரிசுத்திட்டம் ஒன்றினை ஆரம்பிக்க ஆலோசனை வழங்கினார்.

1889-ல் பேர்தா வொன் உங்களுடைய ஆயுதங்களைக் கீழே போடுங்கள் (Lay down your Arms) எனும் தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டார். இந்நூல் உலகின் பலராலும் வாசிக்கப்பட்டது. பலபல அறிஞர்கள் இந்நூலைப் பாராட்டிக் கடிதம் எழுதினர். ஆயிரக்கணக்கான கடிதங்கள் பேர்தாவுக்கு வந்தன,

பேர்தாவுக்குகிடைத்த பாராட்டுக் கடிதங்களுள் லியோ டால்ஸ்டாயின் கடிதமும் ஒன்றாகும். பேர்தா வொன் சுட்னரின் சமாதானப்பணியை உலகின் பல அறிஞர்கள் பாராட்டினர்.

அல்பிரட் நோபல் 1896—ம் ஆண்டு மார்கழிமாதம் 10-ம் திகதி காலமாகினார். இதன் பின்னர் அல்பிரட் நோபலின் பெயரில் வருடாந்த நோபல் சமாதானப் பரிசுத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது உலகில் ஆயுதங்களைக் குறைக்கவும், இல்லாமல் செய்யவும், அதேநேரத்தில் சமாதானப் பணியினை முன்னெடுத்ததன் காரணமாக நல்லபணி ஆற்றியவருக்கு இவ்வாறான பரிசு வழங்க ஏற்பாடாகியது.

1904-ம் ஆண்டில் அமெரிக்காவில் இருக்கும் பொஸ்டன் நகரில் முதலாவது சர்வதேச சமாதானக் காங்கிரஸ் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பேர்தா ஆஸ்திரிய சமாதான இயக்கத்தின் பிரதிநிதியாகப் பங்குகொண்டார். (ஆஸ்திரிய சமாதான இயக்கத்தின் ஸ்தாபகரும், தலைவருமாக பேர்தா வொன் சுட்னா திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.)

பேர்தா அமெரிக்காவில் இருந்த சமயத்தில் பல அறிஞர்களும், பெரியார்களும் அவருடன் தனிப்பட்ட கூட்டங்களை நடத்தினர்.

சாதாரண குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து, பிள்ளைகளைப் பராமரிக்கும் தொழிலை மேற்கொண்ட பேர்தா வொன் சுட்னர் பிற்காலத்தில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற எழுத்தாளராகவும், அரசியல் பத்திரிகையாளராகவும் சமாதானத்தின் மீட்பராகவும் அழைக்கப்பட்டார்.

பேர்தா சமாதானத்துக்காக ஈட்டிய அரும்பெரும் சேவைகளைக் கருத்திற்கொண்டு, அவருக்கு 1905-ம் ஆண்டில் சமாதானப் பணிக்கான முதல் நோபல் பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

உலகில் போரை நிறுத்த வேண்டும் என்பதற்காக அயராது பாடுபட்ட பேர்தா வொன் சுட்னர் 1914-ம் ஆண்டு ஜூன்மாதம் இவ்வுலகில் இருந்து மறைந்தார்.

## அறவழியின் பாலர் ஆசிரியர் பயிற்சி

க. கோபாலகிருஷ்ணன் பயிற்சிப் பொறுப்பு, கல்வி ஆலோசகரும்

ஆசிரியர்களுக்குப் பயிற்சி இன்றியமையாதது. அதிலும் விசேடமாகப் பாலர்களுக்குக் கல்வியூட்டுவோர்க்குப் பயிற்சி கட்டாயமானதென்று குறிப்பிடல் பொருத்தமானதாகும். எவராலும் பாலர் கற்பிக்கப் படலாமென்ற தத்துவம் இக்காலத்திற்கு ஒவ்வாதொன்றாகும். போதிய தகைமையும், பயிற்சியும், மனோ நிலையும் கொண்டுள்ள ஓர் ஆசிரியராலேயே பாலர்களின் கல்வியை முன்னெடுத்துச் செல்லமுடியும்.

பாலர் கல்விபற்றியோ, பாலர் ஆசிரியர் பயிற்சி பற்றியோ மக்கள் நலன்பேண் அரசாங்கம் ஒன்று அக்கறையற்றிருப்பது மிகவும் வருந்தத்தக்கதொன்றாகும். இதனாலேயே தனியார் தாபனங்கள் இப்பணியைமேற்கொள்ளவேண்டியுள்ளது. அறவழிப் போராட்டக்குழு வடபுலத்தில் நாற்பதுக்கு மேற்பட்ட பாலர் கல்வி நிலையங்களை அமைத்தும் நிர்வகித்தும் வருகின்றது. இப்பள்ளிகளிலும் வெளியிலும்சேவையாற்றும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட வேண்டிய தன் இன்றியமையாமையை உணர்ந்து 1986-ம் ஆண்டு முதல் தொகுதியான நாற்பத்தைந்து ஆசிரியர்களுக்கு இத்தாபனத்தினால் பயிற்சியளிக்கப்பட்டது. மீண்டும் இந்த ஆண்டு ஐம்பத்தைந்து ஆசிரியர்களுக்கு 1988/89 பயிற்சியளிக்கப்பட்டது.

இப்பயிற்சியின் விரிவுரையாளர்களாக ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலிருந்தும் கல்வித் திணைக்களத்திலிருந்தும் ஏனைய தாபனங்களிலிருந்தும் கல்விமான்கள் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு இத்தாபனம் என்றென்றும் கடமைப்பாடுடையதாகவே இருந்துவரும். மறுபுறத்தல் பயிற்சியாளர்களின் உற்சாகமும் ஊக்கமளிப்பதாகவே இருந்து வந்துள்ளது.

பயிற்சிக் காலத்தில் பயிலுனர்க்குப் பாலர்களைக் கற்பித்தற்கான அடிப்படைப் பயிற்சிகள் யாவும் வழங்கப்பட்டன. கல்விக் கொள்கைகள் தத்துவம், கற்பித்தல் முறைகள், குழந்தை உளவியல், மொழி வளர்ச்சி, எண் கருவளர்ச்சி, அழகியற்கலை, ஆக்கத்தொழிற்பாடு, சுகாதாரக் கல்வி, பாலர் பாடசாலை, நிர்வாகம், முகாமைத்துவம், ஒன்றிணைக்கப்பட்ட கல்வித்திட்டம், உடற்கல்விபோன்ற முக்கிய துறைகளில் நவீன முறைகளில் பயிற்சியளிக்கப்பட்டன.

செயல் முறைக் கற்பித்தல் வகுப்புக்களும் நடாத்தப்பட்டன. பயிற்சியின் ஓர் அங்கமாக கல்விச் சுற்றுலா வொன்றும் மேற்கொள்ளப்பட்டது. இறுதியில் பாலர்க்கான கைப்பணிக் கண்காட்சியொன்றும் நடாத்தப்பட்டது.

சுருங்கக்கூறின் இப்பயிற்சி ஒரு பூரணமான பயிற்சியாக அமைந்ததென்றே குறிப்பிட வேண்டும். இதன் வெற்றிக்குப் பொறுப்பாக இருந்த சகலருக்கும் இப்பயிற்சிக்குப் பொறுப்பாளன் என்றமுறையில் எனது நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இதுபோன்ற பயிற்சிவகுப்புக்கள் தொடர்ந்தும் நடைபெற எம்மாலான சகல முயற்சிகளையும் எடுக்க வேண்டியது எதிர்காலக் குழந்தைகளின் கல்வியில் அக்கறையுள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும். இந்நாட்டில் பாலர் முன் பள்ளிக்கல்வி தழைத்தோங்க வாழ்த்துகிறேன்.

## செல்வா எங்கள் செல்வம்

தந்தை செல்வா எங்கள் செல்வம்
சிந்தையில் கொள்வோம் தினமும் அவரை
அன்பு கருணை அஹிம்சை வாழ்வில்
என்றும் கொண்டவர் எங்கள் செல்வா.

ஈழ மண்ணின் இமயம்— தமிழர்
வாழ்வின் உதயம் செல்வா
தமிழுக்காக சிறையும் சென்றார்
சத்திய வழியில் போரும் செய்தார்.

சாதி மத பேதமற்ற
சமுத்துவ சமூகம் வேண்டுமென்பார்
நீதி நெறிகள் அத்தனையும்
நிலைத்திருக்க பாடுபட்டார்.

குட்டுண்டு குனிந்து வாழ்ந்த
தமிழர் எங்கள் நிலைதனையே
எட்டுநிக்கும் எடுத்துச் சொல்லி
எங்களுக்காக வாழ்ந்திருந்தார்.

— வனிதாமணாளன்

# நாங்கள் பசியால் வாடுகிறோம்

— லெபனான் சிறுவர்

லெபனானில் நடைபெற்று வந்த யுத்தத்தின் காரணமாக அங்கிருக்கும் இளம்சிறார்கள் மத்தியில் நிலவிய எண்ணப்பாடுகள் நம்பிக்கைகள் பயங்கள், துன்பங்கள் அவர்கள் பற்றி லெபனான் சிறுவர்கள் கூறும் கருத்துக்கள் இவை.

## நாங்கள் பசியால் வாடுகிறோம்
### சப்றின் யசின் (12) கூறுகிறார்

''முதலில் சட்டிலாவில் இருந்த அகதிகள்நலன் முகாமில் தங்கினோம். எமக்கு ஒரே பசியாய் இருந்தது, யுத்தம் ஆரம்பிக்கும்வரை எனது தகப்பனார் ஒரு சயிக்கிள்கடையை நடாத்திவந்தார். பின்னர் யுத்தம் ஆரம்பித்ததும் எமது வீடும் உடைக்கப்பட்டது. பொருட்கள் உடைமைகளை இழந்தோம் புகலிடம்தேடி ஒவ்வொரு இடமாக அலைந்தோம். அடெல் என்னும் ஆறுவயதுடைய என் சகோதரன் பசியின்கொடுமை காரணமாக எந்நேரமும் அழுத வண்ணமே இருந்தான்.

''எங்கள் தகப்பனாருக்கோ எவ்விதவேலையும் கிடைக்கவில்லை. குடும்பத்திற்கு வருமானம் கிடைக்கவில்லை. அதன் காரணமாக நான் ஒரு வருடத்திற்குப் பாடசாலைக்குப்போகவில்லை. ஆனால் லெபனானில் எமது கஷ்டநிலையை அறிந்துகொண்ட ஐக்கியநாடுகள் அகதிகள் ஸ்தாபனம் எம்மை ஒரு பாடசாலையில் சேர்த்துக் கொண்டது. பாடசாலை மிகவும் நன்றாகவே இருந்தது. ஆனால் எம்பகுதியில் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது.''

''என்னுடைய தாயாரிடமும் பணம் இல்லை. நாம் தற்போது தங்கியிருக்கும் மிகச் சிறிய வீடுகூட மழைநேரத்தில் ஒழுகிக் கொண்டிருந்தது. சப்பாத்துக்கள் இன்றி பாடசாலைக்குப் போக இயலாது. எனவே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் வழங்கிய சப்பாத்துக்களுடன் நாம் பாடசாலைக்குச் சென்று வருகின்றோம். எமது வாழ்க்கையில் அமைதி மிக விரைவில் ஏற்படும்என நான் ஒவ்வொருநாளும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்''

## "என்னுடைய சகோதரன் இப்போதும் உயிருடன் இருக்கின்றான் என நம்புகிறேன்"
### ஜலால் அல் ஹஜ் (12)

''பெய்ருத்துக்கு வெளியே இருக்கும் ஐபா பாடசாலைக்குச் செல்கிறேன். ஆயினும் யுத்தம் காரணமாக அடிக்கடி பாடசாலை நடைபெறுவதில்லை. யுத்தம் ஏற்பட்ட வேளைகளில் குண்டுகள், றொக்கட்டுக்களில் இருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ள நாம் பாதுகாப்பான மறைவிடங்களைத் தேடினோம். யுத்தத்தின் காரணமாக எமது பகுதி மிக மோசமாகத் தாக்கப்பட்டது. எமது சொத்துக்கள் சேதமாக்கப்பட்டன. இப்பகுதியில் எங்கு பார்த்தாலும் கற்குவியலையே காண முடியும், இங்கே யுத்தம் ஆரம்பமானதும் நான் எனது சகோதரர்களுடனும் தாயாருடனும் எமது பகுதியில் இருந்து வெளியேறினோம். ஆனால் எமது தந்தையோ எம்முடன் வரவில்லை அவர் அங்கிருக்கும் வைத்தியசாலையில் சமையல்காரராக வேலைசெய்கிறார். "யுத்தம் காரணமாக எமது தகப்பனார் வேலைசெய்யுமிடத்தில் இருந்து வீட்டுக்கு வர இயலவில்லை அப்பா வீட்டுக்கு வராமையால் அம்மா மிகவும் கவலைப்பட்டுக் கொண்டார்.

''ஆனால் அப்பா வேலை பார்த்த ஆஸ்பத்திரியும் கூட குண்டுகளால் தாக்கப்பட்டுவிட்டது. ஆஸ்பத்திரி மூடப்பட்டு விட்டது''

''எனது சகோதரன் ஜமால் திப்பொலியில் இருக்கும் அகதிகள் முகாமில் இருக்கின்றார். ஆனால் எனது மூத்த சகோதரனை மொகமட் என்பவரை நீண்டகாலமாக நான் பார்க்கவில்லை. அவன் எங்கே இருக்கிறான் எனத் தெரியவில்லை. சில காலத்துக்கு முன் அவன் கடத்திச் செல்லப்பட்டான். உயிருடன் இருக்கின்றானா? இல்லையா? இது என்னை அடிக்கடி வாட்டுகின்ற வினா. இருப்பினும் மூத்த சகோதரன் இன்னமும் உயிருடன்தான் இருக்கின்றான் என நம்புகின்றேன். அவன் இறக்கவில்லை. சகோதரன் நினைப்பு என்னைப் பீடிக்கும் போதெல்லாம் நான் அதிர்ச்சியடைகிறேன். அதிஷ்டவசமாக எனது தகப்பனார் இப்போது எம்முடனே இருக்கிறார்.''

''நான் டாக்டராகவேண்டும். என்ற நினைப்புடன் பாடசாலைக்குச் சென்று படித்து வருகிறேன்.

## 'எவ்வளவு காலம் தொடரும்" மேரி குறிஜ் (11)

''எமது தேசம் எரிந்து கொண்டிருக்கிறது. நான் ஐந்தாம்வகுப்பில் படிக்கிறேன். எனக்கு யுத்தத்தை தவிர வேறு எதுவும் தெரியாது. எப்போதும் யுத்தம்தான், அவர்கள் சமாதானத்தைப் பற்றி எப்போதும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இது என்னவென்று நான் அறியேன். சமாதானம் இதமானது என அவர்கள் கூறுகிறார்கள்.''

''தேசத்தில் குண்டுமழை பொழிகின்ற சமயங்களில் நாம் பாதுகாப்புத்தேடி ஓடுகிறோம். பயம் பீதிஎல்லாம் வாட்டுகிறது. எவ்வளவு காலம் இது தொடரும்என்பது யாருக்குமே தெரியாது. குழந்தைகளும் தாய்மார்களும் பீறிட்டு அழுகிறார்கள். மனிதர்கள் சத்தமிடுகிறார்கள், பசி பட்டினியால் மக்கள் வாடுகின்றார்கள்.''

உணவு இல்லை. பசி வாட்டுகிறது. பாடசாலைக்குச் செல்கின்ற சமயத்தில் பசிகாரணமாக மயங்கி விழுகின்றேன். பாடசாலை ஆசிரியர் இருதுண்டு பாணை மட்டும் தருவார். எனக்கு புதிய பென்சில், கொப்பி வாங்கித் தருவதற்கு என் பெற்றோருக்கு பணம் இல்லையே.''

(தொடர்ச்சி 8 ஆம் பக்கம்)

# பேராசிரியர் வித்தி நினைவு அலைகள்

பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஒரு பெரிய ஆலமரம். தேசத்தில் பல விழுதுகளை ஸ்திரமாக நாட்டிவிட்ட ஒரு சிறந்த கல்விமான். பேராசிரியர் வித்தியிடம் கல்விபயின்று உயர்நிலை அடைந்திருப்பவர்கள் நாலாயிரத்துக்குமேல் இருக்கக்கூடும்.

கல்வி, கலை, கலாச்சாரம் பொதுப்பணி போன்ற துறைகளில் பேராசிரியர் வித்தி தன் பங்களிப்பை நிரம்பவும்செய்து பல்வேறு சாதனைகளை ஏற்படுத்தியுள்ள சாதனையாளன். தமிழுக்குக் கிடைத்த பெரும் சொத்துக்களில் ஒன்று "வித்தியானந்தன்" எனும் சொத்து.

பேராசிரியர் வித்தியுடன் பழகுகின்ற அரியவாய்ப்பு நான்கு கட்டங்களில் எனக்குக் கிட்டியுள்ளது.

அந் நான்கு காலகட்டங்களையும் என் நினைவுத்திரையில் படம்போல் பதித்துப்பார்க்கிறேன், நினைவுகள் பசுமையானவை.

பல்கலைக்கழகத்தில் அவரிடம் படிக்கின்ற வாய்ப்புக் கிட்டாவிட்டாலும்கூட வாழ்வியலில் அவரிடம் பழகுகின்ற வாய்ப்புகளைக்கொடுத்த இறைவனுக்கு நான் நன்றி கூறிக் கொள்கிறேன். 1974-ம் ஆண்டு நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. மாநாட்டு அமைப்பின் இலங்கைக்கிளைத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், மாநாட்டுச் செயலகம் யாழ். கண்டி வீதி "துரைராஜா அசோசியேட்" கட்டிடத்தில் இயங்கியது. இச்செயலகத்தில் நான் முழுநேரத்தொண்டனாக சுமார் இரு மாதகாலம் பணியாற்றினேன்.

பேராசிரியருடன் பழகுகின்ற முதலாவது வாய்ப்பு எனக்கு அங்கேதான் கிடைத்தது. மாநாட்டுப் பணிகளில் முக்கிய பணிகளில் ஒன்றான ஆராய்ச்சிக்கட்டுரைகளை தட்டச்சில் பொறித்து இரட்டிப்பு இயந்திரத்தில் படிகள் தயாரிக்கும் பணி என் முக்கிய பணியானது.

மிகவும் கஷ்டமான பணிதான், இருப்பினும் தமிழ் மாநாட்டின் வெற்றிக்காக வேண்டி கஷ்டத்தையும் பாராது ஓயாது பணிசெய்தேன்.

தொழில் ரீதியாகப் பல தட்டச்சாளர்கள் யாழ்மாவட்டத்தில் இருந்தனர். ஆனால் தொழில் ரீதியில் நான் தட்டச்சாளன் அல்ல.

ஆயினும் அனுபவ வாயிலாக தட்டச்சாளன் ஆனேன். நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுச் செயலகத்தில் தட்டச்சுப் பொறியுடன் சதா பணிசெய்தேன். மாநாட்டு அமைப்பாளர்கள் அனைவரதும் பாராட்டையும் பெற்று என் பணிகளை உரியநேரத்தில் முடித்துக் கொடுத்தேன். மாநாட்டு வெற்றிக்காக நான் காட்டிய பங்களிப்பைப் பேராசிரியர் வித்தி பல கட்டங்களில் பாராட்டி ஊக்குவித்தார்.

1981-ம் ஆண்டில், மதுரையில் இடம்பெற்ற ஐந்தாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் பங்கு கொள்கின்ற

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# புதிய சமுதாய வெளியீட்டகம் நடாத்தும் கட்டுரை/கவிதைப்போட்டிகள்

இளைஞர்-யுவதிகள் மத்தியில் படைப்பாற்றல்களை ஊக்குவிக்கும் பொருட்டு, புதிய சமுதாய வெளியீட்டகம் கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடாத்துவதற்கு முன்வந்துள்ளது.

இப்போட்டிகளில் 16 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட இருபாலாரும் பங்குபற்றலாம்.

பங்குபற்ற விரும்புவோர் கீழே காணப்படும் படிவத்தைப் பூர்த்தி செய்து, அதனுடன் தமது படைப்புக்களை, செயலாளர், புதிய சமுதாய வெளியீட்டகம், தபால் பெட்டி இல. 2, சாவகச்சேரி எனும் முகவரிக்கு 13-3-89-ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

போட்டிகளுக்கான தலைப்புகள்:-

1) **கட்டுரைப் போட்டி**
   - (அ) புதியதோர் உலகம் செய்வோம்
   - (ஆ) வாழ் - வாழவிடு
   - (இ) போரா? சமாதானமா?

2) **கவிதைப் போட்டி**
   - (அ) சமாதானப் பறவைகள்
   - (ஆ) எழுமின்—விழிமின்
   - (இ) உழைப்போம்—உண்போம்

இப்போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெறுபவருக்கு தலா 100 ரூபாய் சன்மானமும், இரண்டாம் இடத்தைப் பெறுபவருக்கு தலா 50 ரூபாயும் சன்மானமாக வழங்கப்படும்.

போட்டிக்குக் கிடைக்கும் படைப்புகள் மூவர் கொண்ட நடுவர் குழுவிடம் பரிசீலனைக்குக் கொடுக்கப்பட்டு, இறுதி முடிவுகள், சித்திரை மாத அறவழி பத்திரிகையில் வெளியிடப்படும்.

## கட்டுரை / கவிதைப்போட்டி விண்ணப்பம்

1) முழுப்பெயர்:- ..............................

(2) தபால் முகவரி:- ..............................

(3) பிறந்த திகதி:- ..............................

(4) வயது:- ..........

(5) பங்குபற்றும் போட்டி:- ..............................

..............................
போட்டியாளர் கையொப்பம்

திகதி:- ..............................

அறவழி
NONVIOLENCE

### சக்கரவர்த்தி ஹிரோகிட்டோவின்
# மரணச்சடங்கில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பங்குபற்றக்கூடாது?

காலஞ்சென்ற யப்பானிய சக்கரவர்த்தி ஹிரோகிட்டோவின் மரணச்சடங்கு வைபவங்களில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பங்குபற்றக்கூடாது என சர்வதேச தோழமை இணக்க இயக்கத்தின் யப்பானியக்கிளை வெளிநாட்டு அரசாங்கங்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.

சக்கரவர்த்தி ஹிரோகிட்டோவின் இறுதிக்கிரியைகள் இம்மாதம் 24-ம் திகதி வெகு விமரிசையாக யப்பானில் இடம்பெறவுள்ளன.

இது தொடர்பாக யப்பான் தோழமை இணக்க இயக்கம் (JFOR) விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது :

"மறைந்த சக்கரவர்த்தி ஹிரோகிட்டோவின் மரணத்தையும், அடுத்த சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பட்டிருக்கும் அஹிஹிட்டோவின் சிம்மாசனம் ஏறும் வைபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு யப்பானில் இருக்கின்ற "ஷின்ரோசிம்" (Shintoism) எனும் மதத்தை யப்பானில் அரச மதமாக்கும் ரகசிய திட்டத்தினை அரசு கொண்டுள்ளது எனவும், இதன்மூலம் அங்கு இருக்கின்ற ஏனைய மதங்களை இரண்டாம் தர மதமாக்கும் செயல் இடம்பெறவுள்ளது எனவும்,

இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது ஏகாதிபத்திய யப்பானிய அரசு சகல ஆசிய நாடுகளிலும் ஆக்கிரமிப்பை மேற்கொண்டதன் மூலம், அந்நாடுகளில் 'ஷின்ரோ தேவாலயங்களை' நிறுவி அதன்மூலம், "ஷின்ரோசிம்" மதத்தின் தந்தையெனக் கருதப்படும் சக்கரவர்த்தி ஹிரோகிட்டோவினை "தெய்வம்" போலக் கருதி மக்களை வழிபடச் செய்தது எனவும்,

"இரண்டாம் உலக மகா யுத்தகாலத்தின்போது சக்கரவர்த்தி ஹிரோகிட்டோவினால் இழைக்கப்பட்ட பல்வேறுவித குற்றங்களுக்கு, அவர் யப்பானிய மக்களிடம் எக்கட்டத்திலும் மன்னிப்புக் கேட்கத் தவறிவிட்டார்" என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, சக்கரவர்த்தி ஹிரோகிட்டோவின் மரணச்சடங்கில் வெளிநாட்டு அரசாங்கப் பிரதிநிதிகள் பங்குபற்றுவதன்மூலம், அவரால் மனித குலத்துக்கு இழைக்கப்பட்ட குற்றங்களை உலகின் பார்வையில் இருந்து மறைத்துக் கொள்வதும் ஒரு திட்டமாகவுள்ளது.

மறைந்த சக்கரவர்த்தி ஹிரோகிட்டோவை ஒரு மாபெரும் சமாதானப் பிரியர் என யப்பானிய அரசும், மக்கள் தொலைதொடர்பு சாதனங்களும் பிரச்சாரம் செய்து வருவது வேடிக்கையான விஷயமாகவுள்ளது என யப்பான் தோழமை இணக்க இயக்கத்தின் பொதுச் செயலாளர் திரு. மசாஓகி இனுவா (Masaoki Inaab) தெரிவித்துள்ளார்.

## நாங்கள் பசியால்.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

"கோபெய்றியில் இருக்கும் எனது வீட்டுக்கு அருகில் நான் உதைபந்தாட்டம் ஆடிக்கொண்டிருந்த நேரத்தில் குண்டுகள் வீசப்பட்டன. இதன் காரணமாக நான் மயங்கி விழுந்துவிட்டேன், அறிவில்லை. எனது சகோதரன் என்னைத் தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தான் என்பதைப் பின்னர் அறிந்தேன். நான் மயக்கம் நீங்கி எழும்பிய சமயம் எனக்கு ஒரு கால்மட்டுமே இருக்கக்கண்டேன். குண்டுத் தாக்கத்தின் காரணமாக எனது சகோதரனும் மொசுமட் பார்வையிழந்துவிட்டான்."

"நான் வளர்ந்து பெரியவனானதும் டாக்டராக வர விரும்புகிறேன், யுத்தத்தை நான் வெறுக்கிறேன், சண்டை பிடிப்பது கூடாது நான் எக்காரணம் கொண்டும் போர் வீரனாக ஒருபோதும் வரமாட்டேன். நாட்டில் சமாதானம் நிலவவேண்டும் என்பதே எனது பெரிய ஆசையாகும்.

"யுத்தம் எனக்குத் துன்பத்தைத் தருகிறது. எல்லாமே அழிக்கப்பட்டுவிட்டது. யுத்தத்தின் காரணமாக நான் என் சகோதரனை இழந்தேன். நான் வீட்டுக்கு வரும்போதெல்லாம் என் அம்மா என் சகோதரனை நினைத்து அழுகின்றார். என் அம்மாவைத் தினசரி அழவைக்கின்ற யுத்தத்தை அடியோடு வெறுக்கின்றேன்.

'நாட்டில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் பிறந்தேன். என்னைச் சுற்றிலும் யுத்தம் நடைபெறுகின்றதே? வளர்ந்த மனிதர்கள் முட்டாள்கள். ஏன் யுத்தம் நடைபெறுகின்றது எனக் கேட்கும்போது அவர்களால் சரியான பதிலைத் தர முடியவில்லை, ஆயுதங்களை வைத்திருக்கும் அவர்கள் அவற்றை மிக விரைவில் கடலில் வீசவேண்டும் என நான் விரும்புகிறேன்,

"நாம் எல்லோரும் ஆடிப்பாடி சமாதானமாக இருக்க வேண்டும். அப்போதுதான் பறவைகளைப்போல நாம் சுதந்திரமாக இருக்கலாம்.

## காத்திருப்போம்

சமாதானப் பாவையே
உனக்கு
உயிருடனேயே
சமாதி கட்டிய
சண்டாளர்கள் யார் ?
உன்னை
அஞர்கலியின்
தோழியாக்கியது யார் ?
நீ செய்த
குற்றம் என்ன ?
ஓ .. அமைதியுடன்
காதல்
கொண்டாயா ?
என்ன செய்வது
கருத்தொருமித்த
காதலுக்குத்தான்
இவ் வையகத்தில்
இடமில்லையே
முக்கியமாக
பயங்கரவாத
பாதுஷாக்களின்
சர்வாதிகாரம்
ஒடுக்கப்படும்வரை
உன் காதலுக்கு
அனுமதி கிடைக்காது
உனக்கு
இழைக்கப்பட்ட
கொடுமையைக்
காண சகியாது
அமைதியும்
உன் கல்லறையில்
தலையை
அடித்துக்கொண்டு
உயிரை
மாய்த்துக்கொண்டான்
என்று தான்
இந்த பாதுஷாக்கள்
மனம்
திருந்துவார்களோ ?
வெண் புறுக்கள்
பறக்குமா ?
காத்திருப்போம் நாம்.

— புசல்லாவ அமீர்

## பேராசிரியர் வித்தி நினைவு...,

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்பினை எமது குழுவின் ஸ்தாபகர் திரு. க சச்சிதானந்தன் ஏற்படுத்திக் கொடுத்தார்.

அக்காலத்திலும் கூட பேராசிரியர் வித்தியுடன் மிக நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்புக்கிட்டியது. பழகுவதற்கு மிக இனியவர். படித்தவர் படியாதவர் என்ற பேதமின்றி சமுதாயத்தின் எல்லாத்தரப்பில் இருப்பவர்களுடன் மட்டும்தான் அவரின் நட்பு இருந்தது அல்ல, பேராசிரியர் வித்தியுடன் பழகக்கிடைத்த இரண்டாவது வாய்ப்பும் என் வாழ்வில் முக்கியமானதே.

1982 ம் ஆண்டு இவ்வாண்டில் முதல் முதல் தொகுதிரீதியில் சமூக பொருளாதார ஆய்வு சாவகச்சேரித் தொகுதியில் ஏற்படுத்தப்பட்டது. இப்பாரிய பணியினை திட்டமிடல் அமைச்சு யாழ் பல்கலைக் கழகத்துடன் இணைந்து ஏற்படுத்தியது.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குப் பின்புறத்தில் இருந்த கட்டிடத்தில் திட்ட அலுவலகம் இயங்கியது. இவ் அலுவலகத்தில் திட்ட உதவியாளராகப் பணிசெய்தேன்.

சமூக பொருளாதார ஆய்வுப்பணிகள் தொடர்பாக அடிக்கடி பல்கலைக்கழகம் செல்கின்ற வாய்ப்பு கிட்டியது. அப்போதெல்லாம் நாலும் என் அன்புச் சகோதரனும் ஸ்தாபனத்தின் தலைவருமாகிய திரு. வீ எஸ். துரைராஜாவுடன் துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தனுடனும் அடிக்கடி பேசுகின்ற சந்தர்ப்பம் கிட்டியது.

பேராசிரியருக்கும் தென்மராட்சிக்கும் மிக நெருங்கிய தொடர்புகள் இருந்தன. தென்மராட்சிப்பகுதியின் அபிவிருத்திப்பணிகளில் அவர் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்தார். அபிவிருத்தி தொடர்பாக சாவகச்சேரியில் நடாத்தப்பட்ட பல கருத்தரங்குகள், மாநாடுகளில் பங்கு கொண்டார்.

திட்டமிட்ட வகையில் தென்மராட்சி அபிவிருத்தி செய்யப்படல்வேண்டும் என்பதில் கூடிய அக்கறை காட்டியவர்களுள் பேராசிரியரும் ஒருவராவார். சாவகச்சேரியில் திட்ட அலுவலகம் நன்கு அமைந்திருந்து பணிகள் செய்ததைப் பேராசிரியர் பாராட்டியிருக்கின்றார்.

1986 ம் ஆண்டு எங்கள் ஸ்தாபனத்தின் காப்பாளராகிய பேராசிரியர் கு. நேசையா அவர்களின் அறவழிப்பணிகள் ஈடுபாட்டினைப் பாராட்டி அவரது சேவைகளைக் கௌரவிக்க நாம் முடிவு செய்தோம்.

எங்கள் பேராசிரியர் நேசையாவுக்கு பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்விழாவில் அவருக்கு "அறநெறிக்காவலர்" எனும் பட்டத்தினைசூட்டிபேராசிரியர் வித்தி சிறப்புரை வழங்கினர்.

இக்காலத்திலும் பேராசிரியர் வித்தியுடன் மிக நெருங்கிப்பழக அரிய வாய்ப்புக் கிட்டியது. பேராசிரியர் வித்தியுடன் இந்நான்கு கால கட்டங்களில் இணைந்து பணி செய்ய எனக்குக்கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருத்தில்கொண்டு நான் பல்கலைக்கழகத்தில் அவரிடம் நான்கு ஆண்டுகள் படிக்காவிட்டாலும் கூட சமுதாயப பணிகள் சார்ந்த வகையில் நான்கு ஆண்டுகள் பழகிக்கொள்கின்ற உயரிய வாய்ப்புக்கள் கிடைத்தனவே என எண்ணித் திருப்திப்பட்டுக்கொள்கின்றேன.

எமது நூலகத்திற்கு புத்தகங்கள் திரட்டும் முயற்சியில நாம் ஈடுபட்ட வேளையில் புத்தக அன்பளிப்புக்கோரி அவருக்குப் பல்கலைகழகத்திற்கு கடிதம் எழுதியிருந்தேன்.

கடிதம் அனுப்பிய பல மாதங்களாகிவிட்டன அவரிடம் இருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை 1988 ம் ஆண்டு டிசம்பர் மாதம் பேராசிரியர் வித்தி கொழும்பில் தங்கியிருந்தார் எமது நூலகத்திற்கு 200 தமிழ் ஆங்கில நூல்களை தனது "தமிழகம்" வீட்டில் பெற்றுக் கொள்ளுமாறு தகவல் அனுப்பியிருந்தார். அப்போது எனக்குக் கிடைத்த பூரிப்புக்கோ அளவில்லை எனலாம்.

புத்தகம் கேட்டு நான் கடிதம் எழுதிப் பல மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும்கூட பேராசிரியர் வித்தி சிறியோனாகிய என் வேண்டுகோளை ஞாபகத்தில் இருத்தி நூல்களை அன்பளிப்புச் செய்ய முன்வந்தமையை எண்ணி புழகாங்கிதம் அடைந்தேன்.

நான் மிக விரைவில் பூவுலகை விட்டுப் போய் விடப் போகின்றேன் என்ற நினைப்பில் தானோ என்னவோ அவர் அந்நினைவாகத் தாம் பாவித்த அரிய பொக்கிசங்களில் ஒரு பகுதியை எமக்கு வழங்கினுர். என எண்ணத் தோன்றுகின்றது.

பேராசிரியர் வித்தி கொழும்பில் காலமாகிவிட்டார் என்ற செய்தியைக் கேட்டு நான் மிகவும் தாக்கமடைந்தேன்.

தமிழ் மண்ணில் இருந்து மற்றுமொரு வாசமிக்க மலர் பறிக்கப்பட்டுவிட்டதே. தமிழ் இனத்தின் சொத்துக்கள் இவ்வாறு போய்விட வேண்டுமா? 'வித்தி ஐயாவின்' மறைவு தாங்க முடியாத பேரிழப்பு. பேராசிரியர் வித்தியுடன் ஏற்பட்ட நினைவுகளை மீண்டும் மீட்டிப்பார்க்கிறேன். வித்தி ஐயாவின் ஆத்மா சாந்தியடைய நான் பிரார்த்திக்கிறேன.

## சைவச் சிறுவர்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ச்சியடைய வேண்டுமென அறவழிப் போராட்டக் குழுவை வேண்டுகின்றோம். அதுவே எங்கள் அவா. நிச்சயம் அந்தவகையில் பயன்படும் முறையில் செயல்படுமென நம்புகிறோம்.

"வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

ஆறுமுகம் கந்தையா, J.P.
நிர்வாகச் செயலாளர்,
சைவச் சிறுவர் இல்லம்
டிண்டி வீதி, கைதடி.

செயல் முறைகள் ஊடாக
அடிப்படை இலத்திரனியல்
BASIC ELECTRONICS
THROUGH ACTIVITIES
ஆக்கம்
மு. வீரகுலசிங்கம்
வெளியீடு
புதிய சமுதாய வெளியீட்டகம்
த. பெ. இல. 2,
சாவகச்சேரி.

இப்பத்திரிகை புதிய சமுதாய வெளியீட்டகத்தால் யாழ்ப்பாணம், புனிதவளன கத்தோலிக்க அச்சகத்தில் 1989 மாசிமாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது'